# குடும்பம்

3



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# அங்கே அவர்கள் தவறான பாதிப்பினால் பாதிக்கப்படுகின்றனர்



## சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

---

# செய்தி: வேறொருவரால் விளையும் பாதிப்பு 13.10.1962

---

இன்றைக்கு அநேகர் ... சபைக்கு செல்லும் ஒரு குடும்பத்ினரை எடுத்துக் கொள்ளுங்கள்.

தேவன் அந்த குடும்பத்தினரை சுகப்படுத்தி, ஆசீர்வதித்து, அவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுத்திருப்பார்.

சிறு பிள்ளைகள் உணவு மேஜையில் ஜெபிப்பார்கள் அவர்கள் படுக்கைக்குப் போகும் முன்பு ஜெபிப்பார்கள்.

தகப்பனும் தாயும் கைகோர்த்து ஜெபம் செய்வார்கள்.

அவர்கள் இப்படித் தொடர்ந்து செய்து கொண்டேயிருக்கும் வரைக்கும், அவர்கள் ஒரு குடும்பமாக நிலைத்திருப்பார்கள்.

ஆனால் அவர்கள்... ஆரம்பத்தில் அவர்களுக்கு ஒன்றும் இருக்கவில்லை. ஒருக்கால் அவர்கள் வெவ்வேறு இடங்களுக்கு செல்ல ஒரு டப்பா கார் இருந்திருக்கக்கூடும். அல்லது அவர்கள் நடந்து சென்றிருப்பார்கள்.

முடிவில் அவர்கள் நல்ல கார் ஒன்றை வாங்குவார்கள். ஒரு நல்ல வீடும் கூட.

முதலாவதாக என்ன தெரியுமா, உலகம் உயர்வகுப்பினர் என்றழைக்கப்படுபவர் களுடன் அவர்கள் தொடர்பு கொள்ள விரும்புகின்றனர்.

அவர்கள் இடம் மாறி வசிக்கின்றனர்.

அங்கே அவர்கள் தவறான பாதிப்பினால் பாதிக்கப்படுகின்றனர்.

**நீங்கள் எப்பொழுதுமே தேவனுடைய ராஜ்யம் எங்குள்ளதோ, தேவனுடைய மகிமை எங்கு ஊற்றப்படுகிறதோ, அங்கு தங்கியிருக்க வேண்டும், ஆவிக்குரிய விதமாக நீங்கள் இரவும் பகலும் போஷிக்கப்படக்கூடிய இடத்தில் தங்கியிருங்கள்.**

முதலாவதாக என்ன நடக்கிறது தெரியுமா? குடும்பத்தில் பிரிவினை உண்டாகின்றது. உலகப்பற்று அவர்களை ஆட்கொள்ளுகிறது. அவர்கள் மேட்டிமை கொள்கின்றனர்.

உசியாவும் அதைத்தான் செய்தான். அவன் மேட்டிமை கொண்டான். அவனுக்கு அதிகப் பெருமை வந்து விட்டது.





# தேசத்தில் பெண்ணியல்புகளும் தந்தை நிலைகளும் சுக்கு நூறாகப் போய்விட்டன

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஜீவனுக்காக தாகம் கொள்ளுதல் 04.03.1960

நம்மிடத்தில் பிரசுரிக்கப்படும் செய்தித் தாள்களில் ஒன்றை நான் வாங்கினேன். அதில் எழுதப்பட்டிருந்தது என்னவென்றால், கடந்த உலகப் போரின் போது அயல் நாடுகளுக்கு சென்ற இராணுவ வீரர்களில் நான்கில் மூன்று பேர், வெளிநாடுகளுக்கு சென்று ஆறு மாதங்கள் ஆனதும் தங்கள் மனைவிகளால் விவாகரத்து செய்யப் பட்டனர். அப்பெண்கள் வெடி மருந்து தொழிற்சாலைகள், மற்றும் இன்னும் பிறவற்றில் வேலைக்குச் சென்றனர்.

இப்பொழுது, ஒரு மனிதன் வியாதிப் பட்டிருந்து, அவனுடைய மனைவி

வேலைக்குச் செல்ல முடியாதிருந்து. என்னை மன்னிக்கவும் - அவனால் வேலைக்கு செல்ல முடியாத ஒரு நிலையில், அவனுடைய மனைவி குடும்பத்தை நடத்தும்படியாக வேலை செய்தாக வேண்டிய சூழ்நிலை இருக்கு மானால் அதைக்குறித்து நான் ஒன்றும் சொல்ல மாட்டேன்.

அது சரி, ஆனால் சற்று கூடுதலான பணம் சம்பாதிக்க அவள் வெளியே செல்வாளானால், அவள் பணி செய்கின்ற இடத்திலிருக்கின்ற அந்த போக்கிரிகளின் கூட்டத்திலிருந்து அவளை அப்பால் நீங்கள் வைத்திருப்பது நலம்.

அவளுடைய இடம் வீடு தான். அது தான், அவள் வீட்டில் தான் இருக்க வேண்டியவளாக இருக்கிறாள்.

அடுத்ததாக, திருவாளனே, நீ உன்னை எப்பொழுதுமே நல்லவன் என்று கூறிக் கொள்கிறாய், ஆனால் இரவிலே நீ அவளை விட்டு விடுதிகள் மற்றும் பல இடங்கள் உன்னை அழைக்குமானால், அவ்வாறே செய்கிறதினாலே உன்னைத் தானே நீ வெட்கத்திற்குள்ளாக்கிக்கொள்ள வேண்டும்.

தேவன் உனக்கு ஒரு வீட்டைக் கொடுத்திருக்கின்றார். அதை நீ நெஞ்சார நேசிக்கவும் அதில் நீ மனநிறைவு கொள்ளவுமே உனக்கு ஒரு வீட்டைக் கொடுத்திருக்கின்றார்.

காரியம் அப்படியிருக்கையில் மனிதர் தங்கள் மனைவிகளை நடத்துகிற விதத்தை யும் மனைவிகள் மனிதரை நடத்துகிற

விதத்தையும் காணும் போது வெட்கித் தலைகுனிய வேண்டியதாயிருக்கிறது.

தேசத்தில் பெண்ணியல்புகளும் தந்தை நிலைகளும் சுக்கு நூறாகப் போய்விட்டன.

நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்கு கள் குவிந்து நிறைந்திருக்கின்றன. அவ்வித மாகத் தான் இருக்கும் என்று இயேசு கூறினார். “நோவாவின் நாட்களில் நடந்தது போல, நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் பெண்கொண்டு பெண் கொடுத்தார்கள்” என்றார். அது பாவமும் அவமானமான ஒரு செயலுமாகும். அவ் விதமாக என்னை அழைக்க வேண்டாம். நான் இல்லை .....



# தந்தையே, இதை சற்று நினைவில் கொள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: கர்த்தரின் சரீரத்தைப் பகுத்தறிதல் 12.08.1959

தந்தையே, இதை சற்று நினைவில் கொள்.

உன் சிறு பையன் ஒரு நாளிலே மனிதனாகும்படிக்கு வளரப் போகிறான்.

அவன் விவாகம் செய்து ஒரு குடும்பத்தையும் கொண்டிருக்கப்போகிறான்.

தான் விருப்பங்கொள்கின்ற எல்லா காரியத்திலேயும் தான் நினைப்பது மாத்திரமே நடக்க வேண்டும் என்கின்ற மனப்பாங்கைக் கொண்டிருக்கவும் - சரியானது எது தவறானது எது என்பதன்

வித்தியாசத்தை சரியாக பகுத்தறியாத நிலையில் இருக்கும்படி வளர்க்கப்பட்டிருக்கும் ஒரு பையனுடன் வாழப்போகும் மனைவிக்கு தேவன் உதவுவாராக.

அவ்வாறான ஒரு வளர்ப்பை செய்வது அன்பல்ல.

அக்காரியமானது முழு அலட்சியமாகும்.

வேதாகமம் முற்றிலும் சரியாகக் கூறுகிறது. பிரம்பைக் கையாடாமல் இருப்பது உன்னுடைய மகனை பாழாக்குதலாகும்.

---



ஒரு தகப்பன் என்ற
முறையில் உன்னுடைய
பிள்ளைக்கு நீ பிரம்படி
கொடுக்கும்படிக்கான
பொறுப்பை சந்திக்க
வேண்டியவனா
யிருக்கிறாய்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: தேவனுடைய சமூகத்திலிருந்து விலகியோடும் ஒரு மனிதன் 17.02.1965

ஆனால், அந்த பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும், சில நேரங்களில் அவ்விதம் செய்வது நம்முடைய தோலை உரிக்கும் நிலைக்குள்ளாக்கும்.

ஒரு தகப்பன் என்ற முறையில் உன்னுடைய பிள்ளைக்கு நீ பிரம்படி கொடுக்கும்படிக்கான பொறுப்பை சந்திக்க வேண்டியவனாயிருக்கிறாய்.

அந்த சிறு பிள்ளைகளை நீ பார்க்கும் போது அவ்விதமாக செய்வதற்கு நீ விரும்பமாட்டாய். ஆனால் ஒரு தகப்பன் என்கின்ற முறையில், ஒரு தாய் என்கின்ற முறையில் அந்த சிறு பிள்ளையை வளர்க்க

வேண்டிய பொறுப்பை நீ சந்திக்கத்தான் வேண்டும்.

ஏனென்றால் வேதாகமம் "பிரம்பைக் கையாடவில்லையென்றால் நீ உன் மகனை பாழாக்குகிறாய்'' என்று கூறுகின்றது.

இந்த காரியமானது இன்றைக்கும் உலகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு உளவியல் நிபுணருடைய கண்களிலும் சரியான ஒன்றாகவே காணப்படுகின்றது.

அது இன்னும் தேவனுடைய சத்திய மாக நிலைநிற்கின்றது.

அது இன்னும் அதிகமாக கையாளப் பட்டிருக்குமானால் இன்றைக்கு நம்மிடையே சிறு பிள்ளை, இளமை பருவத்தினர் குற்றம் புரிதல் காரியம் மற்றும் நம்மிடைய காணப்படுகின்ற மோசமடைந்த நிலையானது அதிகமாக இருந் திருக்காது.



# உங்கள் பிள்ளைகள் எங்கே விளையாடுகின்றன என்பதை கவனித்துக் கொண்டேயிருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை - 19.01.1963

தொலைக்காட்சி. தணிக்கைக்குட்படுத் தப்படாத படக்காட்சிகள், அசுத்தம், நாற்றமெடுத்த காரியங்கள் .... அது ஒரு உதாரணத்தை எனக்கு கொண்டு வரு கின்றது.

இன்றைக்கு நம்முடைய வாலிபப் பிள்ளைகளைக் கவனியுங்கள்.

நம்முடைய பெண் பிள்ளைகளைக் கவனியுங்கள்.

பள்ளியிலிருந்து வருகின்ற சிறு பையன்களைக் கவனியுங்கள்.

ஆறு, ஏழு அல்லது எட்டு வயதிற்கு மேலே கூட இருக்காது. அப்பிள்ளைகள் சிகரெட்டுகளை பற்ற வைக்கின்றன.

ஏன் அவ்வாறு அப்பிள்ளைகள் செய் கின்றன?

ஒருக்கால் அப்பிள்ளைகளின் அம்மாக் கள் அவர்கள் முன்பாக அவ்விதமாக செய்திருப்பார்கள்.

அவர்களும் அப்படி செய்திருக்க வில்லையெனில், அப்பிள்ளைகள் யாரு டன் நண்பர்களாக ஐக்கியம் வைத்துள்ள னரோ அந்த பிள்ளைகள் அவ்விதம் செய்திருப்பார்கள்.

உங்கள் பிள்ளைகள் எங்கே விளை யாடுகின்றன என்பதை கவனித்துக் கொண் டேயிருங்கள்.

அது சரியே, இங்கே மற்றுமொரு காரியம். என் மனைவி அதை அறிவாள். முன்பொரு சமயத்தில் நாங்கள் மேஜையை சுற்றி உட்கார்ந்திருந்தோம்.

குடிபோதையில் இருக்கும் ஒரு கடல் மாலுமி கூட தன்னைக் குறித்து வெட்க மடையச் செய்யும் ஒரு வார்த்தையை என்னுடைய சிறு ஜோசப் உளறினான்.

நான் திரும்பிப் பார்த்து "என்ன அது?" என்று கேட்டேன்.

அவனுடைய தாய் ஏறக்குறைய மயக்கமே அடைந்து விட்டாள். அந்த சிறு பையனோ ஒன்றும் அறியாத விதத்தில் அப்பாவியாக காணப்பட்டான்.

அவன், "அப்பா, உங்களுக்கு என்ன வாயிற்று?" என்று கேட்டான். அவனுடைய கண்களில் பெரிய நீர்த்துளிகள் வந்தன.

அப்பொழுது நான் அதைப் போன்ற ஒன்றை நீ கூறவே கூடாது என்றேன்.

அந்த வார்த்தையின் அர்த்தம் என்ன வென்பதை அவன் அறியாதிருந்தான்.

காரியம் என்னவென்று ஆராய்ந்து பார்த்த போது, பள்ளியிலே இருந்த சிறு பிள்ளைகள் அந்த அசுத்த வார்த்தையை உபயோகித்துக் கொண்டிருந்தனர் என்று கண்டு கொண்டேன்.

அப்பொழுது நான், "தேனே, அந்த வார்த்தை பிசாசினுடையது" என்றேன். பாருங்கள், உங்களுக்குப் புரிகின்றதா, உங்கள் சிறு பிள்ளைகள் ...

சகோதரனே, அது எந்தவிதமான நிலையை அடைந்துள்ளதென்றால், நாய் நாயை சாப்பிடும் நிலையை அடைந்துள்

ளது. எல்லாவிதமான பாவங்களும் ஒன்று சேர்ந்துள்ளன.

ஓ, என்னே! தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பாவத்தை விரும்புகிறவர்கள், சுகபோகத்தை விரும்புகிறவர்கள்... ஓ என்னே! இருபது நிமிட பிரசங்கம் மிக நீண்ட ஒன்றாயிருக்கின்றது. ''நான் சென்ற இரவு நிகழ்ச்சியை காண வேண்டுமே, பாருங்கள். “சீக்கிரம், இதை சீக்கிரம் முடியுங்கள், நான் இந்த காரியத்தைச் செய்ய வேண்டும்" பாருங்கள். அவர்கள் தங்களுடைய மதத்தை முடித்து விட்டனர். அவர்கள் அங்கே சென்றனர். அதுவே போதுமானதாயிருக்கிறது.



ஆனால் ஜெபம் தான் அந்த தீய
பிசாசை அப்பிள்ளையிடத்திலிருந்து
துரத்தியடிக்கும். அது சரியே. ஜெபம்
தான் அதைச் செய்யும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-23 கேள்விகளும் பதில்களும் COD #12

இப்பொழுது, ஒரு கூட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும் படிக்கு தேவன் என்னை வழிநடத்துகிறார், நல்லது, சகோதரனே, எல்லா காரியமும் நடந்தேறுவதை சற்று கவனித்துப் பாருங்கள். அல்லது நீங்கள் என்னை வீட்டிற்குச் செல்ல விடுங்கள், அங்கேயும் நீண்ட தூர தொலைபேசி அழைப்புகள் எனக்கு வருகின்றன. இப்பொழுது நான் வியாதியஸ்தருக்காக ஜெபிக்க வேண்டும். சிறு ஜோசப் நேராக என் கழுத்தை நோக்கி என் மீது ஏறி வருவான். சாராள் ஒரு கேள்வியை என்னிடம் கேட்பாள். பெக்கி பியானோவை வாசிக்க ஆரம்பித்து விடுவாள். நான் “உஷ் - உஷ் - உஷ்!” என்பேன். என்

கையை அவர்கள் மீது வைத்து, “ஹே, உஷ், உஷ், உஷ், நான் - வியாதி யஸ்தருக்காக அப்பா ஜெபிக்கப் போகி றேன்” என்று கூறுவேன்.

“உம், அப்பா, இதோ பாருங்கள், ஜோசப் இவ்வாறு செய்து விட்டான்...” நீங்கள் பாருங்கள்? ஜெபத்தை ஆரம்பித்து விடுவேன். ஜெபம் முடிந்த பிறகு, அவர்கள் தங்கள் பொம்மைகளை எடுத்து அமைதியாக இருப்பார்கள். அது பிசா சாகும். நிச்சயமாக அது அதுவே தான்.

111. பிறகு நான் வந்து, “ஜோசப், நீ இன்ன - இன்ன காரியத்தை செய்யக் கூடாது” என்பேன். உங்களுக்குத் தெரி யுமா, முதலாவதாக அவன் ஒரு பழக்கத்திற்குள் வந்து விடுவான் என்று உங்களுக்குத் தெரியும். உங்கள் பிள்ளை களிடத்திலும் அதை கவனிக்கலாம், அவர்

கள் உங்களிடம் பொய் பேசுவார்கள். ஆம், அது தான் உங்கள் பிள்ளைகள் மேல் இருக்கின்ற பொய்யின் ஆவியாகும். இதற்கு ஒரே ஒரு பரிகாரம் தான் உண்டு. ஒரு பெரிய பிரம்பு அல்ல, உங்களுக்கு தெரியும், சகோதரன் ஜெஸ், நாங்கள் உதை வாங்கின அந்த கோல். நாங்கள் தொல்லையில் சிக்கிக் கொண்டால் பழைய துப்பாக்கிகளிலிருந்து அந்த கோல்களை எடுப்பார்கள், ஹிக்கரி மரத்தின் உறுதி வாய்ந்த கட்டை, உங்களுக்கு தெரியும், பழைய துப்பாக்கி வாய் முகப்பு கட்டைகள். இந்த விதமான பரிகாரம் வேலை செய்யாது. ஆனால் ஜெபம் தான் அந்த தீய பிசாசை அப்பிள்ளையிடத்திலிருந்து துரத்தியடிக்கும். அது சரியே. ஜெபம் தான் அதைச் செய்யும்.

112. ஆகவே உங்கள் சிறு மார்த்தா தன்னுடைய சிறிய காலை உதைத்துக்

கொண்டு, அங்குமிங்கும் வெளியே ஓடி, தன்னுடைய சிறு மூக்கை திருப்பிக் கொண்டிருப்பாளானால், அவள் மீதிருக் கும் ஆடைகள் இல்லாமல் போகும் விதத்தில் அவளை நீங்கள் அடிக்கலாம்; ஆனால் இன்னுமாக அவ்விதமாகவே செய்து கொண்டிருப்பாள். ஆனால் நீங்கள் அதை தேவனுக்கு முன்பாக வைத்து, அப்பிள்ளையின் ஆத்துமாவை தேவனுக் கென்று உரிமை கோருங்கள். நீங்கள் அப்படியே செய்து கொண்டு தரித் திருங்கள். எனக்குத் தெரிந்தவரை அது தான் சிறந்த காரியமென்று நான் விசுவாசிக்கிறேன். ஆம், ஐயா! எனக்குத் தெரிந்த வரை அதுதான் சிறந்த ஒரு பரிகாரம், அது ஜெபம் தான்.



அப்படிப்பட்ட ஒரு தாய் எந்த ஒரு தேசமானாலும் அதின் முதுகெலும்பாக அவள் இருப்பாள். அது சரியே.



## செய்தி: மீட்பின் மூலமாக ஐக்கியம் - 03.04.1955

தாய்களும் தந்தைகளும் இந்த காரி யத்தை அதிகமாக செய்திருந்தால் சிறு பிள்ளை குற்றம் புரிதல் காரியமானது இருந்திருக்கவே இருக்காது. இன்று பிள்ளைகள் தெருவில் இங்குமங்கும் அலைந்து திரிந்து கொண்டிருக்க மாட் டார்கள். புரிகின்றதா?''

“இப்பொழுது, ஒருவேளை, அவர்கள் பாவம் செய்வார்களானால், அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திற்காகவும் நான் ஒரு பலியைச் செலுத்தப் போகின் றேன். அவர்கள் பாவம் செய்யும்படியாக ஏதாவது நடக்குமானால் அப்பொழுது

அவர்கள் பழைய நிலைக்கு திரும்பும்படி யாக சிந்தப்பட்ட இரத்தம் அவர்களுக்காக இருக்கும்".

ஓ என்னே! "அவர்களுக்கு நான் அதை ஏற்றெடுக்கப் போகிறேன். இதை ஜானுக்காக செய்கின்றேன். தேவனே இந்த பலியை ஜானுக்காக செலுத்துகிறேன். இப்பொழுது அவன் அங்கே வாழ்க்கைப் பாதையில் வழிதவறிப் போவானானால் அவனை வழி நடத்தும்படியாக இன்னுமாக பரிசுத்த ஆவி இன்னுமாக அவனிடம் வரவில்லை. ஆகவே அவன் வழி விலகிப் போவா னானால், கர்த்தாவே, இங்கே நான் அவ னுக்கு ஒரு பாதையை அமைப்பேன்" என்பாள்.

ஓ, என்னே! "இன்றிரவு மேரி அங்கே இருக்கின்றாள். ஆகவே கர்த்தாவே, அவள்

வழி விலகிப் போவாளானால், நான் அவளை சரியான விதத்தில் வளர்த்திருக் கின்றேன். ஆனாலும் அவள் வழி விலகுவாளானால், முன்பு சிந்தப்பட்ட இரத்தத்தைக் கொண்டு நான் அவளுக்கு ஒரு பாதையை அமைப்பேன்" தேவனே, இரவு நேரத்தில் அவ்விதமாக தங்க ளுடைய பிள்ளைகளுக்காக ஜெபித்த அந்த பழமை தாய்களை போன்று எங்களுக்கு அப்படிப்பட்ட தாய்களை எங்களுக்குத் தாரும். அப்படிப்பட்ட ஒரு தாய் எந்த ஒரு தேசமானாலும் அதின் முதுகெலும்பாக அவள் இருப்பாள். அது சரியே.






சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 60-04-01M ஏன்?

13. வாலிப பெண்களே, இங்கே நெடுகிலும் இருக்கிற இந்தச் சிறு பெண்பிள்ளைகளே, இவர்கள் அழகான சிறு பெண் பிள்ளைகளாக இருக்கிறார்கள், நீங்கள் நீண்ட கூந்தலை உடையவர் களாயிருந்து, சரியானபடி உடையுடுத் தும்படியாகவே இங்கே வளர்க்கப்பட் டீர்கள், ஆனால் நீங்கள் சாத்தானுடைய ஒரு இலக்காகவே இருப்பீர்கள்.

நீங்கள் எல்லா நேரமும் தேவனுடைய வல்லமையை உங்கள் மேல் வைத்துக் கொள்ளுங்கள். அது ஒருபோதும் விலகிப் போகும்படி விட்டுவிடாதீர்கள்.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாக தேவன் உங்கள் இருதயங்களுக் குள் வந்திருக்கிற இந்த மகத்தான, விலையேறப்பெற்ற அணிகலன் தான் மகிழ்ச்சியோடு அனுபவிக்கிற இந்த சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டிருக் கிறது.

# சிறந்த எதிர்மருந்து



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #22

Q.389. **ஒரு நபர், தனக்கு தாழ்வான மனப்பான்மை அல்லது அவ்விதமான ஏதோ ஒரு மனப்பான்மை இருப்பதாக உணருவாரானால், அவர் இதை எப்படி மேற்கொள்வது, எனவே - அவர் ஒரே பிள்ளையாக இருந்த காரணத்தால் வாலிபத்தின் ஆரம்பத்திலே அது ஏற்பட்டிருக்கக் கூடுமா?**

71. அதற்கு எதிரான மனப்பான்மையைக் கொள்ளுங்கள் நீங்கள் - எப்பொழுதுமே உங்கள் வழியையே கடைபிடிக்க வேண்டுமென்றும், எல்லாமே நீங்கள் நினைத்தபடியே ஆக வேண்டுமெனும் மனப்பான்மையை குழந்தை பருவத்திலிருந்தே கொண்டிருந்திருப்பீர்

களானால், அந்த நிலையிலிருந்து மாறி, மற்ற வழியைக் கடைபிடிக்க உங்களாலான எல்லாவற்றையும் செய்யுங்கள். நீங்கள் தன்னயமுள்ளவர்களாய், எல்லாவற்றை யுமே நீங்கள் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டுமெனும் எண்ணம் கொண்டிருப்பீர் களானால், உங்களுக்கு இருப்பவைகளை மற்றவர்களுக்கு கொடுக்கத் தொடங்குங் கள். பாருங்கள்? உங்கள் மனப்பான் மைக்கு மாறான ஒன்றை செய்யுங்கள். எதையுமே மேற்கொள்ள அதுவே சிறந்த எதிர்மருந்து (antidote).”

72. நீங்கள்... தென்பாகத்தைச் சேர்ந்த என் வயோதிப தாய், “நாயின் முதுகில் மயிரை எடுத்துவிட்டால், அதை கடிக்க லாம்” என்று கூறுவது வழக்கம். அது இதற்கும் பொருந்தும்.



# ஒரு குடும்பம் தன்னுடைய மரியாதையை எப்போதாவது இழக்குமேயானால் (பிள்ளைகள் பெற்றொருக்கு மரியாதை செலுத்துவதை இழந்துவிட்டால்), அந்த குடும்பம் சின்னாபின்னமாகிவிடும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும் பாகம் #3, 57-10-06

ஒரு குடும்பம் தன்னுடைய மரியாதையை எப்போதாவது இழக்குமேயானால் (பிள்ளைகள் பெற்றொருக்கு மரியாதை செலுத்துவதை இழந்துவிட்டால்), அந்த குடும்பம் சின்னாபின்னமாகிவிடும்.

ஒரு-ஒரு சபையானது அதனுடைய மேய்ப்பருக்கு மரியாதை செலுத்துவதை இழந்துவிட்டால், ஏன் அந்த சபையே ஒன்றுமில்லாமல் போய்விடும்.

ஒரு தேசமானது எப்போதாவது உச்ச நீதிமன்றத்திற்கும், அதனுடைய தீர்மானத்திற்கும் மரியாதை செலுத்துவதை இழந்து விட்டால், அந்த தேசம் சின்னாபின்னமாகி விடும். அது முற்றிலும் உண்மை.



# குடும்பம்

3

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

